**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 23.08.2025**

**O.S. 136/2020**

**வா.சா. 1 - செல்வராஜ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் பிரதிவாதியை பார்த்துள்ளேன் ஆனால் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 2007 ம் வருடம். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் கமலம் என்பர் வாதியாக இருந்தார் என்றால் சரிதான். கமலத்திற்கு நான் என்ன உறவு முறை என்றால் மகன் கமலம் எனது அப்பாவின் அண்ணனின் மனைவி பெரியம்மா ஆவார். எனது தாயாருக்கும் கமலத்திற்கு எந்த உறவுமுறையும் கிடையாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் சமயம் கமலம் வாதியாக இருந்தார் நான் எப்போது வாதியாக வழக்கில் சேர்க்கப்பட்டேன் என்றால் கமலத்திற்கு வயதாகிவிட்டதால் அரசாங்கம் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் நான் வாதியாக வந்தேன். 2002 ல் கமலம் இறந்து விட்டார் என்றால் சரிதான். கமலத்திற்கு வாரிசுகள் உண்டா என்றால் ஒரே மகள் ஜெயா அவர் வெளியூரில் இருக்கிறார்.

கமலத்தின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கமலத்தின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதியாக வருவதற்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஆவணம் கமலம் உயிருடன் இருக்கும் போது கொடுக்கப்பட்டது அவர் இறந்த பிறகு மேற்படி ஆவணம் செல்லக்கூடியதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கமலத்திற்கு பின் அவரது மகள் தான் வாரிசு என்றால் சரிதான். அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் கமலம், ஜெயா

ஆகியோரை தவிர பிற நபர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்கள் யார் என்றால் கமலத்தின் மகனுடைய குழந்தைகள் இருவர். கமலத்தின் மகன் இறந்து விட்டார் என்றால் சரிதான். கமலத்தின் மகனுடைய இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் காலஞ்சென்று 30 வருடம் ஆகிவிட்டது ஆகையால் தாக்கல் செய்யவில்லை.

வழக்கு பட்டிகை சொத்து கமலத்திற்கு எவ்வாறு கிடைத்தது என்றால் வெகு காலம் வீடு வைத்து அங்கு தான் இருந்தார்கள் சுமார் 30 வருடம் இருந்தார்கள். வழக்கு பட்டிகை சொத்து எந்தவகையான சொத்து என்றால் நத்தம் புறம்போக்கு. நத்தம் புறம்போக்கு நிலம் என்றால் பட்டா வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பட்டிகை சொத்தின் நான்கு எல்கைகள் தெரியுமா என்றால் தெற்கு பக்கம் எனது தாயார் அழகம்மாள் சொத்து, வடக்கு பக்கம் கமலத்தின் சொத்து, கிழக்கு அரசன் விளை ராஜாக்கமங்கலம் ரோடு, மேற்கு பக்கம் எனது சொத்து. எனது இடம் சுமார் 1 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எனது இடத்தை ஒட்டி இருக்கிறது என்றால் எனது தாயாரின் இடத்தை ஒட்டி இருக்கிறது. எனது தாயார் இடத்தை ஒட்டி தான் எனது இடம் இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து எத்தனை சென்ட் என்றால் 2½ சென்ட். கமலம் இறந்த பின்பு அவருக்கு பதிலாக நான் வழக்கை தொடர்வதற்கு கமலத்தால் ஒரு ஆவணம் கொடுக்கப்பட்டது என்று கூறினேன் மேற்படி ஆவணத்தின் பெயர் என்ன என்றால் தெரியாது. கமலம் இறந்த தேதி என்ன என்றால் 08.11.2022.

2020 ம் வருடம் கமலம் தாக்கல் செய்த வழக்கு விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி என்னை காலி செய்யும் படி மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளேன்

அதன் தேதி என்ன என்றால் நினைவில்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக குறிப்பிடும் தேதி என்ன என்றால் எனக்கு நியாபகம் இல்லை. புகார் கொடுப்பதற்கு முன்பு எத்தனை பேர் வந்தார்கள் என்றால் சுமார் 5, 6 பேர் வந்து அப்புறப்படுத்த பார்த்தார்கள். புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். புகார் கொடுத்தால் காவல்நிலையத்தில் ரசீது தரவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்ததை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது சொத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று கோரி தாக்கல் செய்தேன்.

வழக்கு பட்டிகை சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. வீட்டிற்கு கதவு இருக்கிறதா அதன் சாவி யாரிடம் உள்ளது என்றால் கதவு உள்ளது சாவி இல்லை. வழக்கு பட்டிகை சொத்து சம்மந்தமாக வேறு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை சொத்து வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். எத்தனை வருட சொத்துவரி ரசீது என்றால் சுமார் 8 வருடத்திற்கு உண்டானது.

**பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**